# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2033 (விசு ஆண்டு) மார்கழித் திங்கள்



நெடுங்கிள்[ளி] என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு
தேரிருவேலி - இராமநாதபுரம் மாவட்டம்

காலாண்டிதழ் - 55 (2002, சனவரி திங்கள்) விலை ரூ. 1-50
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே......

பக்கம்

1. பழந்தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள்
— க. குழந்தைவேலன் ... 1

2. Alur Inscriptions of Rajendrachola - I
— S. Swaminathan ... 14

3. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் காட்டும் வரிகள், நிலம் மற்றும் வருவாய் நிர்வாகம்
— முனைவர் ரா. கண்ணன் ... 26

## குறிப்பு

நிர்வாகக் காரணங்களால் சூலை 2000 முதல் அக்டோபர் 2001 வரை கல்வெட்டு காலாண்டு இதழ் வெளிக் கொணர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# பழந்தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள்

க. குழந்தைவேலன்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் அய்யன் குளம் என்ற ஊரில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள் இரண்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளை இத்துறையின் திருநெல்வேலி மாவட்டத் தொல்லியல் அலுவலர் முனைவர் மா. செந்தில்குமரனும், குற்றாலம் காப்பாட்சியர் திரு. சொ. சந்திரவாணனும் கண்டறிந்து பழந்தமிழெழுத்துக் கல்வெட்டு வரலாற்றிற்கு அணி சேர்ந் துள்ளனர்.

தென்னன் தமிழ்ப் பொதியில் என்று போற்றப்படும் பொதிய மலைச் சாரலைப் பின்னணியாகக் கொண்டு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஊர் ஐயன்குளம். மலைச் சாரலின் நீட்சியாக இவ்வூரைச் சுற்றி அறையும் பொறையுமாக சிறு சிறு குன்றுகளும், துருகற்களும் நிறைந்துள்ளன. இச்சூழல் தனிமையை நாடும் சமணர்க்கு ஏற்ற உறைவிடமாகத் திகழ்ந்துள்ளது. அதற்கு அடையாளமாக இப்பாறைப் பகுதிகளிடையே சமணத் துறவிகள் வாழ்ந்ததற்கு அடையாளமாகக் கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இப்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர் யார் என்பதைச் சுருக்கமாக இப்படுக்கைகளுக்கருகில் பொறித்து வைத்துள்ளனர்.

ஐயன்குளத்துப் பாறைகளில் இராசப்பாறை நிலாப்பாறை எனப்பெயர் பெற்ற இரு பாறைகளில் இயற்கையாய் அமைந்த முழைஞ்சுகளில்(குகை) கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இராசப் பாறையில் கற்படுக்கையை அமைத்து, மழைநீர் பாறையின் சாய்ப்பு வழியே இறங்கிப் படுக்கையை நனைக்காமல் இருக்க பாறையின் மேல் முகப்பில் வடிகால் விளிம்பு செதுக்கி அளித்தவன் கடிகைக்கோன் மகன் பெருங்கூற்றன் என அப்பாறையில் உள்ள சிறு கல்வெட்டு தெரிவிக்கிறது. இதில் உள்ள கடிகை என்பது கல்விக் கழகத்தைக் குறிக்கும். இக்கடிகை

இப்பகுதியில் இருந்ததா அல்லது வேறேதேனும் ஊரைச் சார்ந்ததா என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1. பள்ளி செய்வித்தான்
2. கடிகை[கோ]வன் மகன்
3. பெருங்கூற்றன்

இக்கல்வெட்டில் உள்ள கோ என்ற எழுத்து சிதைந்துள்ளது'

இராசப் பாறைக்கு அருகில் உள்ளது நிலாப்பாறை. இப்பாறையின் தளத்திலும் இரு படுக்கைகள் காணப்படுகின்றன. இவற்றை அமைத்துக் கொடுத்தவன் ஒரு இளவரசனாக இருக்க வேண்டும். குணவன் இளங்கோ என்பவன் இக்கற்படுக்கைகளைச் செய்வித்தான் எனக் கல்வெட்டு கூறுகிறது.

1. குணாவின் ளங்கோ
2. செய்பித பளி

குணாவின் என்பது குணவன் என்று இருந்திருக்கலாமோ என எண்ண இடந்தருகிறது. ஆனால் கல்வெட்டு எழுத்துகள் 'குணாவின் ளங்கோ' என்றே வாசிக்க இடந் தருகின்றன.

இளங்கோ என்ற சொல்லின் முதலெழுத்தான 'இ'கரம் விடப்பட்டுள்ளது. இது தவறுதலாக நேர்ந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இதே காலகட்டத்தைச் சேர்ந்த கரூர் மாவட்டத்து வேலாயுதம்பாளைய ஆறுநாட்டார் மலைச் (புகளூர்) சேர மன்னர்களின் கல்வெட்டிலும் "ளங் கடுங்கோ ளங்கோ ஆகி" என இரு சொற்களிலும் தொடர்ந்து 'இ'கரம் விடப்பட்டுள்ளது. எனவே இகரம் விடப்பட்டு எழுதப்படுவதற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்.

பழந்தமிழ் எழுத்துகளில் 'இ'கரத்தின் வடிவு இன்றைய அஃகே னத்தின் வடிவை ஒத்திருக்கும். அதாவது முக்காற் புள்ளிகள் வரிவடிவாக ஃ இகரம் இருக்கும். பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் பொதுவாக புள்ளிகளைத் தவிர்த்து எழுதுவதே மரபாக இருந் துள்ளது. செதுக்கப்படாத பொள்ளலாக இருக்கும் பாறைகளில்

கோடுகளாக எழுதப்படும் எழுத்துகள் தெளிவாகத் தெரியும். புள்ளிகள் இட்டால் அது புள்ளியா அல்லது கற்பொத்தலா என அறிய இயலாது குழப்பம் தரும். அதனால் புள்ளிகளைப் பெரிதும் கைவிட்டே எழுதினர். அதே போல புள்ளிகளாய் அமைந்த இகரமும் புள்ளிகளாகையால் விடப்பட்டிருத்தல் வேண்டும். புள்ளி இல்லா மெய்யெழுத்துகளையும், புள்ளி இல்லா எகர, ஒகர உயிர் மற்றும உயிர்மெய் எழுத்துகளையும் இடம் நோக்கிப் புள்ளியுடைய மெய் எழுத்துகளாகவும், எகர ஒகரங்களாகவும் வாசித்துக்கொள்வது போல புள்ளிகளால் ஆன 'இ' கரதலதயும் புள்ளி இல்லாவிட்டாலும் இடம் நோக்கி 'இகர' மாகப் படித்துக் கொள்ளல் வேண்டும், அதுவே அன்றைய வழக்க மாக இருந்துள்ளது. ஆதலின் 'ளங்கோ' என்பதை இகரம் விடப்பட்டதாகக் கருதி இளங்கோ என்றே படித்தல் வேண்டும். இது மரபுவழிச் சரியான வாசிப்பாகும். அதன்படி இக்கல்வெட்டில் உள்ள வாசகம் குணாவின் ளங்கோ'' என்பதையும் முன்பு கண்ட ''ளங்கடுங்கோ ளங்கோ ஆக அறுபிதல்'' என்பதையும் குணாவின் இளங்கோ என்றும் இளங்கடுங்கோ இளங்கோ என்றும் வாசிக்க வேண்டும்.

பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் புள்ளிகள் முற்றிலும் தவிர்க்கப் படவில்லை என்பதற்கு 'ஈ' காரம் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. 'ஈ'கரம் வரும் மாங்குளம், திருவாதவூர், கீழவளவு, மேட்டுப்பட்டி, சித்தன்னவாசல், அழகர்மலை போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளில் ஈகாரம் காணப்படுகின்றது. அங்கு 'ஈ'காரம் இகரமாகவும் ஒலிப்பதைக் காணலாம். பெரும்பாலான இடங்களில் அவ் 'ஈ' காரங்கள் சொற்களோடு தொடர்புடையனவாக காணப் படவில்லை. செயற்கையாகச் சேர்க்கப்பட்டது போலத் தோன்று கின்றது. இகர யகரம் இறுதி விரவும் என்ற நூற்பாப்படி விரவி வரும் என்பதை மாறி வரும் எனக் கருதாது கலந்துவரும் என எடுத்துக் கொண்டு எழுதப்பட்டதோ என எண்ணத் தோன்று கின்றது.

நிலாப்யாறையின் அடிப்பகுதியில் ஒரு குறியீடு காணப் படுகிறது. பெருங்கற்கால மட்கலங்களின் கீற்றுவரிகளிலும் (Graffity) திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் படியெடுத்து வெளியிட்ட கேரள நாட்டு இடக்கல், இலங்கை அனைக்கோட்டை

ஆகிய இடங்களில் கிடைத்த முத்திரையிலும் இக்குறியீடு காணப் படுகிறது. கல்வெட்டுகளை வாசித்த அடிப்படையில் இக்குறி கோ, தலைவன் என்ற பொருளைத் தருகின்றன என ஆய்வாளர்கள் கூறு கின்றனர். இக்கருதுகோள் சரியாக இருக்கும் என்பதை இக்குறியீடு பொறிக்கப்பட்டுள்ள படுக்கைக் கல்வெட்டை இளவரசன் ஒருவன் அமைத்துக் கொடுத்த செயல் உறுதிப்படுகின்றன. இப்புதிய கல்வெட்டு கண்டுபிடிப்புகள் பழந்தமிழ்க் கல்வெட்டுச் சொத்துக்கு ஒரு புதுவரவு. பழங்கல்வெட்டுகளுக்கு ஒரு புதிய விளக்கம் என்ற வகையில் சிறப்பைப் பெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டம் (கொங்கரைக்) களத்தூரில் கிடைத்த ஏரித் தூம்புக் கல்வெட்டு.

களத்தூரை ஒட்டி மேற்கே பரந்து விரிந்த களத்தூர் ஏரிக்குக் கொங்கரையர் கள்ளப் பெருமான் என்பவரது மனைவி கொங்கச்சியர் தூம்பு (மதகு) அமைத்துக் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. எழுத்தமைதி நோக்க இக்கல்வெட்டு கி.பி. 8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும்.

1) ஸ்ரீ யா[ண்]டு உ௰௭
2) கொங்கரையர் கள்ளப்பெ
3) ருமானார் தெவியார் கொங்கச்சியா
4) ர் களத்தூ ரெரிச் செய்வித்த
5) தூம்பு ஸ்ரீ.

படியெடுத்து வாசித்தவர்
**க. குழந்தைவேலன்**

# தொல்லியல் துறையின் அகழ்வாய்வுகள் 1999 - 2000

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1999-2000 ஆண்டுக்கான அகழ்வாய்வுப் பணியில் கடலூர் மாவட்டத்தில் பண்ணுருட்டி வட்டம் மாளிகைமேடு என்ற இடத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் தேரிருவேலி என்ற இடத்திலும் அகழாய்வு மேற்கொண்டது. அவ்வகழ்வாய்வுப் பணிகளின் கண்டு பிடிப்புகள் பற்றிய ஒரு சிறு பார்வை.

## மாளிகை மேடு

கடலூர் மாவட்டம் பண்ணுருட்டி வட்டத்தில் கடலூர் விழுப்புரம் சாலையில் விழுப்புரத்தில் இருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது மாளிகைமேடு என்னும் ஊர். இவ்வூர்ப் பகுதியில் பண்டைய மட்கல ஓடுகளும், செங்கற் துண்டுகளும் மிகுதியாகக் காணப்பட்டன. இவ்வூரின் பெயரும், நத்தமேடு என்ற மேட்டுப்பகுதி அமைப்பும், மட்கல ஓடு மற்றும் செங்கற் துண்டு களின் செறிவும் இப்பகுதி பண்டைய மக்களின் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடியனவாய் இருந்தன. எனவே தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இங்கு 1998ஆம் ஆண்டு ஒரு மேற்பரப்பு ஆய்வை மேற்கொண்டது.

மேற்பரப்பாய்வில் கிடைத்த மிகுதியான இரவுலட்டட் (Rouletted)ஓட்டுச்சில்லுகளும், சொரசொரப்பான செவ்வோட்டுச் (coarse red ware) சில்லுகளும், கங்கைகொண்ட சோழபுரத்து மாளிகைமேட்டு அகழவாய்வில் கிடைத்த சோழர் காலச் செங்கற் களை ஒத்த செங்கற் துண்டுகளும் இது பண்டைய வாழ்விட மென உறுதி செய்தது. அதோடு இங்கு அகழ்வாய்வு மேற் கொண்டால் மிகுதியான தொல்பொருட்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அளித்தது. இந்த சான்று வழியான நம்பிக்கை அடிப்படையில் தமிழ்நாடு தொல்லியல்துறை 1999-2000 ஆண்டுக் கான அகழ்வாய்வுத் திட்டத்தில் மாளிகை மேட்டில் அகழ்வாய்வை மேற்கொண்டது.

மாளிகை மேட்டில் 1999-2000 ஆண்டு அகழ்வாய்வுத் திட்டத்தின்படி எம்ஜிஎம் 1 (MGM)1 எம்ஜிஎம் 2; எம்ஜிஎம் 3; எம்ஜிஎம் 4; என்று அடையாளமிடப்பட்ட நான்கு அகழ்வாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இவற்றில் கிடைத்த தொல்பொருள் சான்றுகளின் அடிப்படையில் கருதளவாக (Approximately) இவை மூன்று காலகட்ட வாழ்நிலைச் சான்றுகளாக வரையறை செய்யப் பட்டுள்ளன. இம்மூன்று காலகட்ட மண்ணடுக்கு, ஆழம், கருதப் படும் காலம், அவற்றில் கிடைத்துள்ள தொல்பொருட்களில் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை மட்டும் கீழே வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

## காலப் பகுப்பு 1

அ) காலம் : கருதளவாக கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை.

ஆ) மண்ணடுக்குகள் : 8 முதல் 6 வரை

இ) ஆழம் : 4.30மீ முதல் 2.45மீ வரை

ஈ) கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க தொல்பொருட்கள் :

1. கருப்பு சிவப்பு மட்கல ஓடுகள் (Black and red ware)
2. இரவுலட்டட் வகை மட்கல ஓடுகள்
3. சொரசொரப்பான செவ்வோடுகள் (coarse red ware)
4. பழந்தமிழ் எழுத்துப் பொறித்த ஓடுகள் (Tamil Brahmi inscribed pot sherds) (3.50மீ; 3.70மீ)
5. ஒருபுறம் உச்சயின் முத்திரையும் மறுபுறம் திமில் யானை உருவம் பொறித்த சாதவாகனச் செப்புக்காசு ஒன்று.
6. வட கருமெருகோடு (NBP) (3.45மீ)
7. செப்புச்சிலம்பு (Copper Anklet)
8. பட்டுநூல் (2.50மீ)
9. தக்கிளி (Spindle whorl)
10. மண்மணி (Terracotta bead)
11. ஒரு புறம் மங்கலச் சின்னங்களும் மறுபுறம் யானையும் பொறித்த பாண்டியர் செப்புக் காசு (எம்ஜிஎம்3)

காலப் பகுப்பு 2 :

அ) காலம் : கருதளவாக கி. பி. 4 முதல் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு வரை

ஆ) மண்ணடுக்கு : 5 முதல் 2 வரை

இ) ஆழம் : 2.45மீ — 1.45மீ

ஈ) கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க தொல்பொருட்கள் :

1. மண்மணி (Terracotta bead)
2. தக்கிளி
3. இரும்பு ஆணிகள்
4. கண்ணாடி மணிகள் (Glass beads)
5. கருப்பு சிவப்பு மட்கல ஓடுகள்
6. செம்பழுப்புப் பூச்சோடு (Russet coated ware)

காலப் பகுப்பு 3 :

அ) காலம் : கருதளவாக கி. பி. 12 முதல் கி. பி. 16ஆம் நூற்றாண்டு வரை

ஆ) மண்ணடுக்கு : 2 முதல் 1

இ) ஆழம் : 1.30 செ.மீ முதல் 0.20மீ வரை

ஈ) கிடைத்துள்ள தொல்பொருட்கள் :

1. சொரசொரப்பானச் சிவப்பு, சிவப்பு, செம்மெழுக்கு, (Red slipped) போலி இரவுலட்டட் (Imitated Rouletted) மட்கல ஓடுகள்
2. மயில் கீற்றுவரி (Graffity) ஓடு (ஆழம் 0.40மீ)
3. தாயக்கட்டை (ஆழம் 0.70மீ) (Dice)
4. மண் குதம்பை (Terracotta earlobe)
5. சுடுமண் மணி (Terracotta bead)
6. சுடுமண் புகைக்குழாய் (Smoking pipe)
7. தக்களி

இவையே அன்றி பல பண்டைய கட்டடப் பகுதிகளின் எச்சங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

1. மூன்றாம் கால கட்டத்தில் குழி எண் 1இல் (MGM-1) இரண்டாவது மண்ணடுக்கில் 1.42மீ ஆழத்தில் 3.80மீ நீளமும் 1.90மீ அகலமும் 010மீ உயரமும் உள்ள செங்கல் சல்லிச் சுண்ணாம்புக் காரைத் தரைத்தளத்தில் 0.13மீ சுற்றளவும் 0.05மீ ஆழமுமுள்ள நடுகழிக் குழி (Post hole) ஒன்று காணப்படுகிறது.

2. மூன்றாவது அகழாய்வுக் குழியில் மூன்றாம் காலகட்டத்தில் 1.10மீ ஆழத்தில் 3.0மீ நீளமும் 0.50மீ தடிப்பும் உள்ள செங்கற் கட்டுமானத்தின் பகுதி தென்படுகிறது. இதில் உள்ள செங்கற்கள் 0.45 × 0.20 × 0.07மீ அளவுடையன. இக்கட்டுமானத்தின் தெற்கு வடக்காக 3.93 நீளமும், கிழக்கு மேற்காக 2.40மீ நீளமும் உள்ள முதற்பகுதி கட்டுமானம் வெளிப்பட்டுள்ளது.

3. குழி எண் 4-இல் (MGM-4) மூன்றாம் காலகட்டத்தில் 3-ஆவது மண்ணடுக்கில் 1.50மீ ஆழத்தில் 4.05மீ நீளமுள்ள செங்கற் கட்டு காணப்படுகிறது. ஏழுவரிச் செங்கல் வரிசைகள் காணப்படுகின்றன. இதில் உள்ள செங்கற்கள் 0.65 × 0.25 × 0.05மீ. அளவுடையன.

4. குழி எண் 4இல் (MGM-4) 0.65மீ சுற்றளவுள்ள ஒன்றின் கீழ் ஒன்றாக அடுக்கப்பட்ட 4 சுடுமண் உறைகள் கொண்ட உறைகிணறு காணப்பட்டுள்ளது. இவ்வுறை கிணறு 2.80மீ ஆழத்தில் 6-வது மண்ணடுக்கைக் கடந்து செல்கிறது. இதனைச் சுற்றி ஓட்டுச்சில்லுகளும், செங்கற் துண்டுகளும் இட்டுக் கெட்டிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கிணற்றை ஒட்டி மேலும் இரு உறை கிணறுகள் கிடைத்துள்ளன. இக்கிணறுகளின் அமைப்பு முதுமக்கள் சாடியை ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேரிருவேலி

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ள ஓர் ஊர் தேரிருவேலி. மாவட்டத் தலைநகரான இராமநாதபுரத்திலிருந்து 33 கி.மீ. தொலைவிலும் வட்டத்தலைநகரான முதுகுளத்தூரில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது இவ்வூர்.

தமிழ்நாடு அரசுதொல்லியல் துறை 1997-98-ஆம் ஆண்டுகளில் தேருரிவேலியில் மேற்கொண்ட மேற்பரப்பு ஆய்வு இவ்வூரில் தொன்மையான வரலாற்றுச் சான்றுகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. தேரிருவேலிக் காலணித்திடல், ஆவாறந்திடல், கழனித்திடல்போன்ற மேட்டுப்பகுதிகளில் மேற்கொண்ட மேற்பரப்பாய்வில் கழகக்(சங்க)காலம் மற்றும முற்காலப்பாண்டியர் காலத்தைச் சார்ந்த மட்கல ஓடுகளும், தொல்பொருள்களும் கிடைத்தன. கிடைத்துள்ள தொல்பொருட்கள் இங்கு அகழ்வாய்வு மேற்கொண்டால் தொல்லியல் சான்றுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. எனவே 1999-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இங்கு அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தேரிருவேலி காலணித் திடலில் ஆறு அகழ்வாய்வுக்குழிகளும் காலணிப் பகுதியில் ஒரு அகழ்வாய்வுக் குழியுமாக ஏழு அகழ்வாய்வுக்குழிகள் (TIV1—TIV7) அகழ்வு செய்து ஆய்வு செய்யப்பட்டன. இவ்வகழ்வாய்வில் இருபெரும் காலப்பகுதிகளைச் சேர்ந்த பண்பாட்டுத் தடயங்கள் கிடைத்துள்ளன. முதல் பண்பாடு கி.மு. 300 முதல் கி.பி. 100 வரையிலான காலத்தையும் இரண்டாம் பண்பாடு கி.பி. 100 முதல் கி.பி. 300 வரையிலான காலக் கட்டத்தையும் சார்ந்ததாகக் கணிக்கப்படுகிறது.

முதல் காலக் கட்டத்தில் பண்டைத் தமிழ் எழுத்துப் பொறித்த மட்கல ஓடுகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

1. "குற" — TIV.1
2. "ம[ா]ன[ா]" — TIV.5
3. " . . . . ல்லன்" — TIV.4
4. "கொற்றன்" — TIV.7
5. "நெடுங்கிள்[ளி]" — TIV.7
6. "சா[த்]தன்" — மேற்பரப்பு

இவற்றுள் நெடுங்கிள்ளி என்ற கழகக் காலச் சோழ அரச குடும்பப் பெயர் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றோடு இரண்டு நுண்கற் கருவிகள் (Microlithic Tools), சுடுமண் தெள்ளு வட்டுக்கள் (Hip Hops), மான் கொம்புகள், செம்பழுப்பு மணிகள் (Carnelian beeds), இரும்புப் பொருட்கள், சுடுமண் பிரிமனைகள், சங்கு வளையல்கள், அறுத்த சங்குத் துண்டுகள், சாணைக் கற்கள் போன்றவை கிடைத்துள்ளன. இவற்றோடு கருப்பு சிவப்பு மட்கல மூடி ஒன்று புறாப்பிடியுடன் கிடைத்துள்ளது. இதே போன்ற கருப்பு சிவப்பு புறாப்பிடி மூடி கொடுமணல் பெருங்கற்கால ஈமக்குழி (Megalithic burrial) அகழ்வாய்விலும் கிடைத்துள்ளது இங்கு இணைத்துக் காணத்தக்கது.

அகழ்வாய்வில் பண்பாட்டுக் கூறுகளை உணர்த்துவதில் பேரிடம் பெறுவது மட்கல ஓடுகளே. இவ்வகழ்வாய்விலும் பண்டைய நாகரிகத்தை உணர்த்தும் கருப்பு சிவப்பு மெரு கோடுகள், செம்பூச்சு (Red Slip) ஓடுகள், பருவட்டுச் சிவப் போடுகள் (Red ware) வட இந்தியக் கருமெருகோடுகள் (NBP) ஆகியன கிடைத்துள்ளன.

எழுத்துப் பண்பாட்டுக் காலத்திற்கு முந்தையதும், எழுத்துப் பொறிப்புக் காலத்தும் தொடர்ந்து பயன்படுத்தப் பட்டதுமான கீற்றுவரி மட்கல ஓடுகளும் இங்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் ஆமை, சுவத்திகம், மீன்தலை மற்றும் மீன் உடல் பொறித்த கீற்றுவரி மட்கல ஓடுகள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் வெற்றியூரில் உள்ள அன்னபூரணியம்மன் கோயில் கல்வெட்டு :

அன்னியூர் நாச்சியார் (அஞ்சனாச்சி) கோயிலில் உள்ள கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் எம்மண்டலமும் கொண்டருளிய விக்கிரம பாண்டியனுடைய 9-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1259) வெட்டப்பட்டது.

திருத்தியூர் முட்டத்தைச் சேர்ந்த அன்னியூரில் எழுந்தருளி இருக்கும் அன்னியூர் நாச்சியார் செவ்வாய்த் திருப்பலி எழுந்தருளும் செலவுக்காக, அன்னியூர் குளத்து மேல் மடையால் நீர் பாய்ந்து நெல் விளையும் பூமியில் அய்யனார் மருதூருடையார் தேவதானம் நீங்கலாக உள்ள நன்செய் புன்செய் ஊரணிகளை அன்னியூர் ஊராள்வார் (ஊரார்) தாழையூர் நாட்டு செம்பொன்மாரி என்ற ஊரைச் சேர்ந்த கானப்பேருடையான் தேசுடை தேவனுக்கு அஞ்சு பணத்துக்கு விற்று விலை ஆவணம் (விலைப் பிரமாணம்) பண்ணிக் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

இந்நிலத்துக்கெல்லையாக கிழக்கில் செட்டியாழத்து மேல் வரம்பும் தெற்கில் . . . மேற்கெல்லை நாகோட்டை எல்லையும் வடக்கெல்லையாக ஆறும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வெற்றியூரில் உள்ள அன்னபூரணியம்மன் கோயில் கல்வெட்டால் தற்பொழுது இக்கோயில் இருக்கும் இடம் அன்னியூர் என்னும், இறைவி பெயர் அன்னியூர் நாச்சியார் என்பதும் அறியப் படுகிறது. இன்று அன்னியர் இல்லை. அதனை ஒட்டி இருந்த வெற்றியூர்ப் பகுதி வளர்ச்சியில் அன்னியூர் ஒடுங்கி தன் பெயரை இழந்து விட்டது.

### கல்வெட்டு வாசகம்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம் வெற்றியூர் அம்மன் கோயில் மாமண்டபத் தென்சுவர்க் அடிநிலை (அதிட்டானக்) குமுதம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ கொமாற பன்மரான திரிபுவன சக்கரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ[வி]க்கிரம தெவற்கு யாண்டு கூ [ஆவது]

கார்த்திகை மாதம் ௰௬ தியதியுஞ் செவ்வாய்க் கிழமையும் பெற்ற விசாகத்து நாள் தாழையூர் நாட்டுச் செம்பொன்மாரி திரு

2. க்கானப்பெருடையான் தெசுடைய தெவ[ன்] திருத்தியூர் முட்டத்து அன்னியூர் ஊற்குச் சமைந்த ஊரொம் இவற்கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இவ்வன்னியூர் நாச்சியாற்கு செவ்வாய்ப் பலிசை [எ]ழுந்தருளி .. விக்க அஞ்சு பணம் குடுப்பாராகக் குடுத்த க[ா]ணியாவது அன்னியூ

3. ர்க்குளத்தில் மெலை மடையால் நீர்பாஞ்சு நெல் விளையும் பூமிக்கு எல்லையாவது கீழ்ப் பாற் கெல்லை செட்டியாழத்தில் மெல்வரம்புக்கு மெற்கும் தென்பாற்கெல்லை வரம்புக்கு வடக் கும் மெல்பாற்கெல்லை நா[கொ]ட்டை எல் லைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஆற்றுக்குத் தெற்கும் ஆக இசைந்

4. த பெருநான் கெல்லைக்குள்பட்ட நிலத்தில் அய்யனார் மருதூருடையார் தெவதானம் நீக்கி யுள்ள நன்செய் புன்செய் ஊரணி [இ]வை விற்று [குடுத்து] செவ்வாய்ப் பலி பங்[கு] எழுந்தருளி வி[க்க] ...... கடமை இருப்பாராகவும் மந்றிந்த நன்செய் புன்செய் ஊரணி மற்றுள்ள இறுப்பு இத்தனையும் தவிர்ந்

(உண்ணாழிகைக்கும் மாமண்டபத்துக்கும் இடைப்பகுதி – அடிநிலைக்குமுதம்)

5. து சந்திராதிச்ச வரை செல்வதாகக் கைக் கெ

6. ாண்டு அனுபவிப்பாராகப் பிடிபாடு பண்ணிக்

7. குடுத்தொம் ஊர்க்குச் சமைந்த ஊராரோம் தெசுவை

8. டய தெவற்கு ஊற்குச் சமைந்த ஊரார் சொற் படி

9. ஊர்க் கணக்கு ... ண்ணப்பன்

10. னென் எழுத்து

— **க. குழந்தைவேலன்**
கல்வெட்டாய்வாளர்

திருச்சி உய்யக் கொண்டான் வாய்க்காலும் கோரையாறும் சேருமிடத்தில் நீர் வழிந்தோடும் கலிங்கில் வைத்துக் கட்டப்பட்டுள்ள கல்வெட்டுப் பகுதி.

1) ஸ்வஸ்தி ஸ்ரீ சாலி

2) வாகன சகா

3) பதம் : சூளாய்க

4) கலியுகாதி ச[சூ]

5) அளகம்அ நீ யி

6) ன்மெல் செல்லா

7) நி[ன் ற] . . . . .

8) . . . . . . . . . . .

செய்தி. கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர், திருச்சி

# Alur Inscriptions of Rajendrachola I

S. SWAMINATHAN
Asst. Sup. Epigraphist,
A.S.I. Mysore.

Many Tamil inscriptions in Karnataka were copied and published in Epigraphia Carnatica series thanks to the efforts of savants like Lewis Rice, R. Narasimhamachariyar, M. H. Krishna and others. However, some inscriptions were not covered and the present inscription is one among them.

Both Tamilnadu and Karnataka have had long tradition and history. It is obvious the fortunes of each state depend upon the other. It was the Chōḷas who made successful inroads into the Karnataka region and added a portion to their empire. In fact the Chōḷa invasion and occupation of Karnataka goes back to the reign of the early Chōḷa ruler, Parāntaka I, who invaded this region. For an inscription[1] of his dated in his 29th regnal year (936 A.D.) in Kannada characters is found engraved on a stone lying to the south of the village Bairakur, Mulabagal Taluk, Kolar District. It records that a person Gaṇipa Rāma, grandson of Baydakūr Maremma died after recovering the cows. To commemorate this event one person, Permāḍi Sāmantappa not only put up an inscription *(kalnatu)* but also granted one *kanduga* of rice-land possibly to the family of the deceased.

But this invasion did not have any lasting impact. His rule, however, was recognised only for a shortwhile. It was left to his grandson Rājarāja I (985-1014 A.D.) to bring this area under the Chōḷa hegemony.

Rājarāja I was the first Chōla ruler who brought a portion of Karnataka under his sway.[2] The provenance of their inscriptions suggest that their actual control of the area confined itself only to the periphery upto about twenty-five miles into the eastern district of Karnataka all along the borders of Tamilnadu. Great rulers like Rājarājā I and Rājēndra I not only conquered but also consolidated their gains. They organised the area under their control into different territorial units, Parts of Gangavāḍi, Taḍigaipāḍi, Nuḷambapāḍi and Mārāyapāḍi which came under their control were named respectively Muḍikoṇḍa chōla-manḍalam and Iraṭṭapāḍikoṇda chōḷa-maṇḍalam. These divisions were further divided into sub-divisions named Gangaikoṇḍachōḷa-vaḷanāḍu, Rājēndrachōḷa-vaḷanāḍu etc., while the imperial chōḷas had records dated in their own regnal years engraved in this area and it seems that they had entrusted the local administration to Viceroys who were members of royal family.[4]

In this paper I would like to comment on a Chōḷa inscription[5] dated in the third-second regnal year of Rājēndra-chōḷa (I) from Ālur, Dēvanahalli Taluk, Bangalore District. This inscription is found engraved on two granite slabs fixed into the wall of a dilapidated Siva temple at Ālur It is in Tamil language and script unfortunately the inscription is damaged in certain places. The letters are big and clumsy and the stone was not properly dressed before incising the record. On account of these limitations the subject-matter cannot be made out satisfactorily.

This inscription has not been properly deciphered at some places. The aim of this article is to revise the reading and intrepet the passages in the light of the revised reading.

This inscription begins with the usual *prasasti* of the king *purvedesamum Gangaiyum konda kop-parakesarivarmarkku* of the king. Normally Rājēndrachōḷa I's inscriptions belonging to

his later regnal years begin with his usual prasasti '*tirumanni valara* and it includes all the details regarding his conquest of various regions chronologically. Perhaps due to the shortage of space the engraver found it feasible to engrave the short *prasasti* beginning with *purvadesamum.* However such instances are not unknown as another record[6] of this same king dated in his thirty-second regnal year begins with the same *prasasti* above is found engraved at a village Kāḍagōḍi, Hosakote Taluk.

Regarding the subject-matter the inscription mentions that Kaḍārankoṇḍa chōḷa Brahmarāyar who received Vikramachōḷā-maṇḍalam as his *jivita* instituted an endowment. Another person Pallavarayan Nuḷamba Gāmuṇḍaṇ of Ālur in Saṇṇai-nāḍu in Vikramachōḷa-maṇḍālam who seems to have received land as *kani* from the *nattukamundas* as he constructed lake (*eri*), *todukarai* (embankment), the sluice (*tumbu*) and also the temple (*devarkoyil*). Further the individual also made a grant of two *kani* and one *ma* of land to the temple.

This is one of the important inscriptions of Chōḷa Rājēndra I in Karnataka. It is dated in his 32nd regnal year (1044 A.D.) i.e. last year of his reign which goes to prove that the area was under the effective control of the Chōḷas.

The inscription refers to certain Gangaināyagam Kaḍā-rankoṇḍa chōḷa brahmarāya. He received Vikramachōḷa maṇḍalam for his maintenance. An inscription of Rājādhi-rāja I[7] from Kāḍagōḍi, Devanahalli taluk dated in his 33rd regnal year (1047 A.D.) states that the general Rājēndra chōḷa brahmarāya received Taḍigaivali *alias* Vikkiramachōla-maṇḍalam as his *jivita.*

The Chōlas had to undertake fresh conquest to reassert their supremacy. They had been constantly waging wars with the rulers of Karnataka since the time of Rājarāja I,

and captured Nuḷambapāḍi, Gangapāḍi and Taḍigaipāḍi[8] However time and again they had to undertake fresh conquests to reassert their authority During the last lap of Rājēndra I's reign the Chalukya ruler Jayasimha II declared crossed Tungabhadra and annexed parts of the Bellary district to his dominion. His successor Āhavamalla Sōmēsvara I renewed the campaign and the Chōḷa monarch felt the need for a fresh invasion for supremacy[9] which they achieved subsequently.

An inscription[10] of Rājādhirāja I from Gangavārpalli (1047 A.D.) refers to the assignment of taxes on various types of land of Saṇṇai-nāḍu in Vikkiramachōla-maṇḍalam which was ceded for the maintenance of the general, Rājēndrachōḷa-Brahmarāya. The inscription under study also mentions that Vikramachōla-maṇḍalam as a *jivita* for Kaḍārankoṇḍa chōla-brahmarāyar. It is not incorrect to suggest that both the generals are identical and he was given Vikramachōla-maṇḍalam for his maintenance as is also stated in our record. It is very likely that this general might have participated in the Chōḷa conquest of Karnataka, precisely Taḍigaivaḻi and after victory the area was renamed as Vikramachōla-maṇḍalam, after the epithet of Rājēndra-choḷa I. This area had been entrusted to the general as his chief to protect the Chōḷa interest there, maintaining Chōḷa garrison stationed there to prevent any outbreak of hostilities. It was the avowed policy of the Chōḷas to colonise the territories that were under their control by renaming geographical divisions, lands, canals, streets, wards and rivers with their names and epithets.

Such instances of ceding territories to their officials and chieftains are not new as an inscription[11] of Rājarāja I from Paṭṭukoṇampaṭṭi, mentions Pañchavan Brahmādarāyar, a *Peruntaram* of the king was ruling from Tagaḍur-nāḍu which was granted to him for his maintenance.

It was the duty of their generals to collect revenue from their territories and maintain the troops, and supply them in times of need to the king, probably a part of feudal obligation.

The inscription under review states that the official had commissioned certain Nuḷamban Kāmuṇḍaṉ to construct the temple and made grants to the temple. This person in all likelihood might have been an official, subordinate to Brahmarāya.

Regarding the nature of the grant it may be said that a temple was constructed and for its maintenance land was donated To cultivate the land a tank was dug and a sluice was also set up to regulate the water supply. An inscription of Rājendrachōḷa I[12] dated in his thirty-second regnal year (1044 A D.) from Kāḍagōḍi, states that Rājarāja vēḷāṉ, son of Permāḍi Gāmuṇḍan, the *gamunda* of Saṇṇai-nāḍu in Tadigaivaḷi *alais* Vikkramachōḷa-maṇḍalam caused the Paṭṭandur tank to be built with three sluices and also donated 750 *kuli* of land as *eripatti* i.e. for the maintenance of sluices. Several instances of providing water supply to the land by digging tanks may be cited.[13] These acts of temples construction, land grant, water supply and such benevolent acts are not new to the Chōḷas, but what is interesting is that they carried these benevolent acts even to the conquered countries perhaps to consolidate their conquests and annexation

Regarding the geographical division the inscription mentions that Ālur is in Saṇṇai-nāḍu, a division of Vikrama-chōḷamaṇḍalam. Ālur is the present Ālur in Devanehalli Taluk, Saṇṇai-nāḍu, wherein is located Ālur comprised roughly the present Devanahalli and Hosakote taluks Probably Saṇṇai-nāḍu was named after a village, Saṇṇai but no such village bearing that name exists, It is tempting to

identify Sannai with Sannadamānikarai in Devanahalli Taluk. But there is no historical vestiges in that village to identify with the Saṇṇai of the historical period.

Saṇṇai-nuḍu, as per Chōḷa inscriptions was located in Vikramachōḷamaṇḍalam[14] As already stated that Vikrama Chōḷa was one of the epithats of Rājendrachōḷa[15] and it was the policy of the Chōḷas to name geographical divisions, and territories after their names. Vikramachōla-maṇḍalam consisted of Saṇṇai-nāḍu, Kuṇṇigāl-nāḍu[16], Kurukundāḍachchi-nāḍu[17], Kukkunur-nādu,[18] and Maṇṇai-nāḍu[19]. However an inscription[20] of Nandidēva (1283 A.D.) located Saṇṇai-naḍu in Nigarlichōḷa-maṇḍalam. It is very likely that the subsequent reallocation and reorganisation Saṇṇai-nāḍu might have been transferred to Nigarilichōḷa-maṇḍalam.

## TEXT[1]

### A - Side

1 Purva dēsamun = Gangai
2 yun = Kaḍāramun = kon
3 ḍa kōp - parakēsaripanmarā -
4 na uḍaiyār srī Rājēn -
5 drachōla - dēvarkku yā -
6 ṇḍu 32ṇḍavadu
7 [Gangai] . . nāyagam Kaḍarān =
8 koṇḍa chōla - brahmarāya
9 śivīdattu Vikkiramachōla -
10 [maṇḍalattu] Saṇṇai - nāṭṭu
11 Ālur srī . . . . kā -
12 muṇḍar magan Pallavarāya
13 rai Nuḷamba kāmuṇḍa

1. From inked impression

## B - Side

1 nāṭṭu Kāmuṇḍarkaḷ vangiyā
2 rai . . llidai bhumiyum kāṇiyum
3 āka=pperru it=tēvarkku [toḍu]ka -
4 raiyun=kaṭṭuvittu tumbum i -
5 ḍuvi[ttu] dēva - kōyilum eḍuppi-
6 tta idukku mērku periya ēri -
7 iḍuvittu dēva[r*]kku iraṇḍu . .
8 . . lumāgu iru kāṇi mā nilamum pi -
9 . . idukku mēkkaḍaiya kollaiyu -
10 (kaṇḍakamu iṭṭēn Nuḷamba
11 kāmuṇḍanen it=danmattai
12 aḻippān [ka]vittiyum vā[narā]
13 saiyum alit[ta] pāvattu chelvā[r*]
14 [ma]dar ivan sollov=eludinēṇ
15 . . . .
(damaged)

---

1. *E.C.*, Vol. X, Mulbagal Taluk No. 203
2. K.A. Nilakanta Sastri : *The Choles* (1955) p. 174
3. K.G. Krishnan. *Tamil inscriptions in Karnataka*
4. *E,p. Ind.*, Vol. XI. p 293
5. *A.R.E.* 1980-81, No. B. 104
6. *E.C.* Vol. IX. Hoskote Taluk, No. 142
7. *Ibid.*. Devanahalli Taluk. No. 76
8. K.A. Nilakanta Sastri, *op.cit.*
9. *Ibid.*, p. 224
10. *E.C.* Vol. IX. Hoskote Taluk No. 76
11. *S.I.I.* Vol. XXVI, No.
12. E.C. Vol. IX, Hoskote Taluk No. 142

13. The Cholas bestowed great attention on the irrigation system even in the conquered area Karnataka. An inscription of Rājēndrachōla I from Maṇalūrpatna, Chennapaṭna Taluk deserves our attention. Dated in his third regnal year (1015 A.D.) this record mentions that the *urar* of Maṇalur permitted the flow of water from the tank of Maṇalur to the land provided by the *sabhaiyar* of Puṇganur *alais* Tirayilōkkiamādēvichaturvēdimangalam to the Vishnu temple, Jayankonda-chola-vinnagarālar at Maṇalur in Kiḻalai-nādu. *E.C.* Vol. IX, 1-ISK No. 142. Hence wherever the Chōlas went they tried to improve the local economy by paying attention to agriculture and irrigation.
14. *E.C.* Vol. IX Devanahalli Taluk. Nos. 14, 76, Hosokote Taluk, Nos. 142, 143.
15. *S.I.I.* Vol. III. p.
16. *E.C.* Vol. XII, K.G. No. 2
17. *Ibid.*, Vol. X, Melur Taluk. No. 101.
18. *Ibid.*, C.B. No. 17
19. *Ibid.*. Vol. IX, D.B. No. 11
20. *Ibid.*, Vol. IX, D.V. No. 28

**நாயக்கர் காலக் காசுகள் கண்டுபிடிப்பு**

கரூர் மாவட்டம் குழித்தலை வட்டம் தோகை மலைப்புத்தூரில் 565 பொற்காசுகள் கண்டெடுக்கப் பட்டன. இவற்றில் எழுத்துக்கள் ஏதுமில்லை. காசுகளின் ஒரு புறத்தில் கட்டாரி, சூரியன், சந்திரன் போன்ற உருவ அமைப்புகளும், மறுபுறம் இருகோடுகளும் அதன் கீழ் சில புள்ளிகளும் இடப்பட்டுள்ளன. இவை முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட நாயக்க மன்னர்களின் காசுகளாக கருதப்படுகின்றன.

செய்தி : கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர், திருச்சி

# துளைப்பொன்

(சென்ற இதழ் - 54 தொடர்ச்சி)

இந்த துளைப்பொன் அனைத்தும் ஓரே எடையுடையவை அல்ல. கல்வெட்டுகளைப் பார்க்கின்றபொழுது துளைப்பொன் குறிப்பிடப்படும் பொழுதெல்லாம் 'விடேல் விடுகு கல்லால் துளைப்பொன் ஏழு கழஞ்சரை', (6/8/8), 'எங்களூர்க் கல்லால் கழைஞ்சிற் பேர்த்த துளைப்பொன் 200 கழஞ்சு' (151/13), 'தன்மக் கட்டளைக் கல்லால் துளைப்பொன்' என்று எடை நிறுத்த கல்லின் பெயருடனும், கழஞ்சு என்ற எடையளவுடனுமே சொல்லப் படுகிறது. எனவே துளைப்பொன் என்பது ஓரே மாதிரியாகக் குறிப்பிட்ட எடையுடையது என்று கருத முடியாது. இப்படி எடை நிறுக்கப் பயன்படுத்தப்பட்ட எடைக்கற்கள் காசுக்கல், பண்டாரக்கல், குடிஞைக்கல், ஊராடுகல் என்று இன்னும் பல பெயர்களில் தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

எடைக்கற்கள் தவிர உரைக்கற்களும் பொன்னைக் குறிப் பிடும்பொழுது சில இடங்களில் குறிக்கப்படுகின்றன. மற்ற உலோகங்களைப் போலல்லாது தங்கத்தின் மதிப்பு அதன் மாற்றுக் (காரட்) கொண்டு மதிப்பிடப்படுவதாகும். எனவே ஊர்களிலும், சபைகளிலும், கோயில்களிலும் உரைக்கற்கள் தனித் தனியே இருந்தன. இக்கற்களில் குறிப்பிட்ட மாற்று (9 மாற்று, $10\frac{1}{2}$ மாற்று) உரைத்து வைத்துக்கொள்ளப்பட்டது. செலாவணி யில் வரும் பொன் வேறொரு உரை கல்லில் உரைக்கப்பட்டு ஏற்கனவே கல்லில் உள்ள மாற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து ஏற்கவோ தள்ளவோ செய்யப்பட்டது. இதனை 'ஊர்க்கல் செம்மை நூற்றுக்கழஞ்சு' (369/4, 575/5) என்று வரும் கல்வெட்டுச் சொற்றொடர்களால் அறியமுடியும். உத்திரமேரூர் கல்வெட்டு உரைக்கல் - மாற்றுப்பார்ப்பது தொடர்பாக ஒரு சிறந்த செய்தியை விவரமாகக் குறிப்பிடுகிறது. குடவோலை முறையில் சில நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பொன் உரைத்து மாற்றுப் பார்ப்பவர்களாக நியமிக்கப்பட்டார்கள் என்பதையும், உரைக்கப்படும் பொன்னை பருங்கல்லில் உரைக்கக் கூடாது; கல்லில் ஒட்டிய பொன்னை மெழுகு கொண்டு ஒற்றி எடுத்து நாள்தோறும் வாரியப் பெருமக்களிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற நியந்தனைகள் அவர்களுக்கு விதிக்கப்பட்டன என்பதையும் விவரிக்கிறது. பொன்

உரைப்பவர்கள் மூன்று திங்களுக்கு ஒரு முறை பிழை செய்ய மாட்டோம் பிழை செய்தால் பசித்து வாழ்வோம் என்று சபையார் முன் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது.[1]

பொன்னில் துளையிடுவது, பொன்னை குறிப்பிட்ட எடைக் கற்களால் நிறுப்பது. பொன்னை உரைக்கல்லால் மாற்றுப் பார்ப்பது போன்ற இச்செய்திகள் இருக்க மேலும் ஒரு செய்தி தொண்டைமா நாடு (529/8) திருமெய்ஞானம் (393/19) கல்வெட்டு களால் அறியக்கிடைக்கிறது. அச்செய்தி 'பொன் சுட்டு வெட்டிச் சூடு கடுத்து தீப்போக்கி ஊற்கற்செம்மை முதல் நூற்றைங் கழஞ்சும்' என்ற கல்வெட்டு வரி எப்படி பொன் செலாவணிக்கு வந்தது என்பதைத் தெளிவுறுத்துவதாகும்.

திரு சட்டோபாத்தியாயர் அவர்கள் கி.பி. 225-950 இடையிலான காலத்தில் தென்னிந்தியாவில் முற்றிலுமாக சுதேசி நாணயங்கள் கிடைக்காமல் இருப்பது பல பிரச்சனைகளை முன் வைக்கிறது என்று குறிப்பிடுகிறார்.[2] உண்மையாகவே இக்காலத்தில் காசுகள் இல்லைதான், கிடைத்துள்ளவையும் மிகச் சொற்பமே. சிம்மவிஷ்ணு, மகேந்திரன், கம்பவர்மன், ஆதித்தன், பராந்தகன், அரிகேசரி, ஜடில பராந்தகன் என்ற மன்னர்களின் பெயர்களில் இவ்விடைப்பட்ட காலத்தில் காசுகள் கிடைக்கவில்லைதான். உத்தமசோழன் முதற்கொண்டு காசுகள் கிடைக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று கல்வெட்டுகளை நோக்குவோமானால் செலாவணி குறிக்கப்படும் கல்வெட்டுகளில் சுமார் 80 சதவீதம் 'பொன்' தான் செலாவணியாகக் குறிக்கப்படுகிறது. எனவே இக் காலக்கட்டத்தில் பொன் தவிர பிற வகைக் காசுகள் அதிகம் செலாவணியில் இல்லை எனலாம்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளில் கொடையாகக் கொடுக்கப்படுபவை ஆடுகள், மாடுகள், பொன் அல்லது காசு ஆகியவையே அதிகம் அவற்றிலும் செலாவணியில் மிகுதியும் இருப்பது பொன்தான். உதாரணமாக தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 19 (பரகேசரிகல்வெட்டுகள்) எடுத்துக் கொண்டால் 471 கல்வெட்டுகளில் 190 கல்வெட்டுகளில் காசு, காணம், பொன் ஆகியவை கொடையாகக் கொடுக்கப்பட்டு

உள்ளன. அதனில் காசு, ஈழக்காசு, பழங்காசு ஆகியவை 31 கல்வெட்டுகள். காணம் 1 கல்வெட்டு எஞ்சிய 159 கல்வெட்டுகள் பொன் பற்றியவை ஆகும். பொன் இந்த அளவு செலாவணியாக இருந்ததை நாம் உணர்ந்தால் பொன் வெவ்வேறு நிறைகளில் துளைப்பொன்னாக இருந்ததை நாம் நன்கு விளங்கிக் கொள்ள இயலும்.

பல்லவர் கல்வெட்டுகளில் மிகுதியும், பாண்டியர் கல்வெட்டு களில் சொற்பமாகவும் காணப்படும் **காணம்** என்ற செலாவணியும் ஒருவேளை துளைப்பொன்னாக இருக்கக்கூடுமோ என்று கருதத் தோன்றுகிறது. 'காண' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு ஒற்றைக் கண், துளை என்ற பொருள்கள் உண்டு.[3] ஒற்றைக்கண் போன்றுள்ளது குன்றிமணி. துளையுடன் ஒற்றைக்கண் போல உள்ளது, இதுவரை நாம் பார்த்த துளைப்பொன். சீவக சிந்தா மணி காணம் என்ற சொல்லைப் பழங்காசு என்ற பொருளில் பல இடங்களில் கையாண்டுள்ளது.[4] அதேசமயம் குதிரைக்கு கொடுக்கும் கொள் ஆகவும் பயன்படுத்தியுள்ளது. துளைப்பொன் குறிப்பிடப்படும்போதெல்லாம் அதன் எடையும் கழஞ்சில் குறிக்கப்பட்டது என்று முன் கண்டோம். ஆனால் காணம் எடையில் குறிக்கப்படாது, அதன் எண்ணிக்கையே (100 காணம், 500 காணம்) குறிக்கப்படுகிறது. எனவே காணம் என்பது ஒரே அளவு எடையில குன்றிமணி போலவோ, கொள் போலவோ அல்லது ஒரே நிறையில் துளைப்பொன்னாகப் பயன்படுத்தப்பட் டிருக்குமோ? என்று கருதத் தோன்றுகிறது.

இப்படி 10-ஆம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்த துளைப் பொன் அதன் பிறகு வழக்கொழிந்துவிட்டது. காரணம் பொன்னிற்குப் பதிலாக செம்பு அதிக அளவில் செலாவணி யாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகலாம். முதலாம் இராசராசன் காலத்தில் பொன்னும், காசும் வேறுபடுத்தித் தனித்தனியாகக் குறிக்கப்படுகின்றன.[5] இக்காலக்கட்டத்தில் பொன்னோடு பொற் காசுகளும் வழக்கிற்கு அதிக அளவில் வந்துவிட்டன. இராச ராசனின் செப்புக்காசுகள் அதிக அளவில் இன்றும் கிடைப்பது சிறிய அளவுச் செலாவணியும் வழக்கிற்கு வந்துவிட்டதை உணர்த்துகிறது. இந்தப் போக்கு சோழர்களின் இறுதிக்காலத்தில் மிகுதியடைந்துள்ளது. இக்காலகட்டத்தில் $\frac{1}{4}$ வேலி நிலத்தின் விலை

45,500 காசுகள் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன.[6] இத்தகைய செலாவணி உடைய சமுதாயத்தில் பொன், துளைப்பொன் ஆகியவற்றின் புழக்கம் குறைந்து விடுவதில் வியப்பில்லை.

---

1. இராசராசன் சிறப்புமலர் - துணுக்குகள் 70, பக்கம் 24, தொல் பொருள் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக்கழகம், மதுரை 1984.
2. Brajaulal Cattopadhyaya, Coins and Currency Systems in South India c.A.D. 225-1300, p. 118, 1977.
3. Sir Monier - Williams, Sanskrit - English Dictionary, 1981.
4. சீவக சிந்தாமணி, பாடல்கள் 591, 1117, 1938, 2410 உ.வே.சா. பதிப்பு 1969.
5. Dr. R. Nagaswamy, Tamil Coins, 1981, p. 65.
6. Ibid, p. 69.

## தரங்கம்பாடியில் தலைமை தேர்தல் அதிகாரி

இந்திய அரசின் தலைமைத் தேர்தல் ஆணையர் **திரு. எம்.எசு.கில்** அவர்கள் 12-12-2000 அன்று தரங்கம் பாடி தொல்லியல் அருங்காட்சியகத்தைப் பார்வை யிட்டார். **திரு. கி. ஸ்ரீதரன்,** பதிவு அலுவலர் திருச்சி அவர்கள் ஆணையருக்கு கோட்டையில் உள்ள காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கமளித்தார். கோட்டையையும், காட்சிப் பொருள்களையும் கண்டு மகிழ்ந்த ஆணையர் "தனக்கு இக்கோட்டையைக் காண வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது" எனப் பதிவு செய்ததோடு தென்மார்க்குக்கான இந்தியாவுக்கான தென்மார்க் தூதர் தரங்கம்பாடி வளர்ச்சியில் மிக ஆர்வமாக உள்ளார் அவரிடம் எடுத்துரைத்து இதன் வளர்ச்சிக்கு உதவுகிறேன் என்று மகிழ்வோடு கூறினார்.

**செய்தி : கா. நெடுஞ்செழியன்**
காப்பாட்சியர், தரங்கம்பாடி

# புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் காட்டும் வரிகள் நிலம் மற்றும் வருவாய் நிர்வாகம்

**முனைவர். ரா. கண்ணன், இ.ஆ.ப.**
ஆணையர்
தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத்துறை

## முன்னுரை

புதுக்கோட்டை மாவட்டம் எளிதாக ஆய்வு செய்யக் கூடிய தாக அமைந்துள்ளது. ஏனென்றால் புதுக்கோட்டை சமஸ்தானம் 1948-ல் தான் சென்னை மாகாணத்துடன் சேர்க்கப்பட்டது. அன்றைய புதுக்கோட்டை அரசில் இருந்த ஆலங்குடி, குளத்தூர், திருமெய்யம் ஆகிய வட்டங்கள் இன்று அப்படியே தனி மாவட்ட மாக அமைந்துள்ளன. இப்பகுதியில் மக்களின் பழக்க வழக்கங்கள், சமூக சமய நடைமுறைகள், உழவு சார்ந்த பொருளாதாரம், உரிமைகள், கடமைகள், சில நீதி நெறிமுறைகள் ஆகியவை பண்டைய மரபையொட்டியே அண்மைக் காலம்வரை அப்படியே நடைமுறையில் இருந்து பிறகுதான் மறைந்துள்ளன. எனவே தொடர்ந்து இருந்த இப்பண்புக் கூறுகள் தொல்லியல் ஆய்வாளர்கள் பண்டைய செய்திகளை எளிதாக விளங்கிக் கொள்ள வாய்ப்பு நல்குபவையாகும்.

## அடிப்படை ஆதாரங்கள்

புதுக்கோட்டைச் சமஸ்தானக் கல்வெட்டுகளை ஒன்று திரட்டித் தனியொரு கல்வெட்டுத் தொகுதியாக அன்றைய புதுக் கோட்டை அரசு வெளியிட்டுள்ளது. இத்தொகுதி, ஆய்வாளர் களுக்கு வாய்ப்பான ஒரு தொகுதியாக உள்ளது. இக்கல்வெட்டுத் தொகுதியை முழுதும் ஆய்வு செய்து தனியொரு நூலாக அமரர் திருமலை, இ.ஆ.ப. அவர்கள் வெளியிட்டமை புதுக்கோட்டைப் பொருளாதார வரலாற்றினுக்கு நல்லதொரு தெளிவு தரும்

நூலாக அமைந்திருக்கிறது.[1] ஜப்பானியப் பேராசிரியர் நொபுரு கராஷிமா தலைமையிலான குழு இத்தொகுதியில் காணப்படும் வருவாய்ச் சொற்களை முழுதும் திரட்டித் தமது ஆய்விற்குப் பயன்படுத்தியுள்ளது.[2] இவ்விரு நூல்களிலும் தரப்பட்டுள்ள வரிகளின் பட்டியல்கள் இக்கட்டுரையில் பயன்படுத்திக் கொள்ளப் பட்டுள்ளன.

## புதுக்கோட்டை மாவட்டத்தின் தனித்தன்மை

புதுக்கோட்டை மாவட்டம் வரலாற்றில் தனித்துவம் பெற்ற தாகும். இப்பகுதியில் பேரரசுகளின் நேரடி ஆட்சி நிகழ்ந்த காலம் குறைவாகும். சிற்றரசுகளின் ஆட்சிப் பொறுப்பிலேயே இப்பகுதி பெரிதும் இருந்துள்ளது. இப்பகுதி சோழர் மற்றும் பாண்டியப் பேரரசுகளின் இடையில் அமைந்ததாகும். வடக்கில் சோழநாடும், தெற்கில் பாண்டிய நாடும் அமைந்திருந்தன. இப் பகுதியைத் தாயகமாகக் கொண்ட இருக்குவேளிர், முத்தரையர் ஆகிய சிற்றரசுகள் அப்பேரரசுகளின் ஏற்றத்தாழ்வுச் சந்தர்ப்பங் களுக்கு ஏற்ப தங்களது தலைமை விசுவாசத்தை மாற்றிக் கொண்டன. இதன் விளைவாக இப்பகுதி தொடர்ந்து சண்டை நிகழும் பகுதியாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் பேரரசுகளின் செல்வாக்கு மற்றும் கட்டாய நியதிகள் இப்பகுதிச் சமூகம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொருளாதார வாழ்வின் மீது தாக்கம் உண்டாக்கின. இதுபோலவே பிற்காலத்தில் விஜயநகரர் ஆட்சியின்போதும் அதன் செல்வாக்கு மற்றும் கட்டாயங்களால் இப்பகுதி விவசாய அமைப்புகளும், உள்ளாட்சி அமைப்புகளும் தாக்கம் பெற்று மாற்றம் கண்டன.

இப்பகுதி நிலங்கள் வானம் பார்த்தவையாகும். நிலங்கள் வறண்டும், மழையால் நீர் பெற்ற கண்மாய்கள் மற்றும் கிணறு களின் மூலம் பாசன வசதி பெற்றும் விளைகின்றன. இப்பகுதி மக்கட்தொகையில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாவர். வேளாளர்களும் பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள நலிந்த பகுதியினருமே விவசாயிகளாக உள்ளனர். இவர்கள் ஊரார், நாட்டார் என்றழைக்கப்படும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்தவராவர். இவர்களை அடுத்து முக்கியத்துவம் உடைய வர்கள் நகரம் என்று அழைக்கப்படும் அமைப்பைச் சேர்ந்த

வணிகர்களும், படைப்பற்று என்ற அமைப்பைச் சேர்ந்த விவசாயத் தொழிலுடைய போர் வீரர்களுமாவர். நகரம் சார்ந்த வணிகக் குழுக்களின் நடவடிக்கைகள் இப்பகுதியில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டன. போர் வீரர்களான மறவர்களின் நடவடிக்கைகள் அண்மைக்காலம் வரை இப்பகுதியில் இருந்துள்ளன, அந்தணர்களின் சபை அமைப்புகளை உடைய பிரம்மதேயங்கள் பரவலாகவும் மற்றவற்றோடு ஒப்பிட மிக குறைவானவையாகவும் இருந்தன. இவ்வகையில் இப்பகுதி ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை அமைப்பும், மக்கள் தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகுதியினரின் முக்கியத்துவம் பெற்றதாகவும் காணப்படுகிறது.

## புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்

புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் பொதுவாக இரண்டு வகையானவை. 1. நிலக்கொடை; நிலம் மற்றும் பிறவற்றின் மீதான கட்டணங்களின் கொடை; சேவைகளுக்கான அறக்கட்டளைகள் பற்றிய ஆவணங்கள், 2. கோயில்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தனி நபர்களுடன் செய்துகொண்ட குத்தகை ஒப்பந்தங்கள் அல்லது விலை ஆவணங்கள்; குத்தகைதாரர் மற்றும் விலைக்குப் பெறுபவருடைய கடமைகள்-உரிமைகள் நிச்சயிக்கும் ஆவணங்கள், இக்கல்வெட்டுகளிலிருந்து மேலோட்டமாக சலுகைகள் நிலவுடமைகள் ஆகியவை அறியக் கிடைக்கின்றன என்றாலும், அவற்றிலிருந்து பல்வேறு வகையான நிலவுடமைகள், குத்தகைகள், உட்குத்தகைகள் பற்றி நமக்குத் தேவையான செய்திகள் உள்ளன.

## அன்றைய வரிகள்

இவ்வாறான பின்புலத்தில் இப்பகுதியில் கல்வெட்டுகளில் காணப்படும் வரிகள், வருவாய்ச் சொற்கள் பற்றி இங்கு காண்போம். புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் ஏறத்தாழ 200 சொற்கள் வரிகளையும், வருவாய் மற்றும் கடமைகளையும் குறிப்பனவாக உள்ளன. இவற்றின் பின்னொட்டுச் சொற்களில் பல பாட்டம், பேறு, தேவை, ஆள், சோறு, வரி, இறை, காசு, வினியோகம்,

பணம் என்பனவாக உள்ளன. வரிகள் காசாகவும், பொருளாக வும், சேவையாகவும் செலுத்தப்பட்டதை உணர்த்துகின்றன.

மேற்குறிப்பிட்ட 200 சொற்களைக் கீழ்வரும் பத்துத் தொகுப்புகளில் உள்ளடக்கலாம்.

1. நிலம் தொடர்பானவை
2. நீர்நிலை தொடர்பானவை
3. தொழில் தொடர்பானவை
4. வணிகப்பொருட்கள் தொடர்பானவை
5. அரசு நிர்வாகம் தொடர்பானவை
6. படை மற்றும் பாதுகாப்புத் தொடர்பானவை
7. சமூகம் தொடர்பானவை
8. ஆவணங்கள் தொடர்பானவை
9. நீதி, தண்டனை தொடர்பானவை
10. இலவச, கட்டாயச் சேவைகள்

## வரி விதிப்பும், வசூலும்

பண்டைய வரிவிதிப்பு முறை ஒரு குறிப்பிடத்தக்க முறை யாகும். விவசாயம் சார்ந்த நிலமுள்ளவர்கள் நாடு, ஊர், என்ற பெயருடைய குழுக்களில் நிர்வாகத்தில் இருந்தனர். இவற்றில் "நாடு" அமைப்புகள் அரசிற்கு வரி ஈட்டித்தரும் அமைப்புகளாக வும், வரி தொடர்பான பதிவேடுகளைப் பராமரிக்கும் நிர்வாக அமைப்புகளாகவும் செயல்பட்டன. அரசு அதிகாரிகள் நாடு அமைப்புகளைக் கண்காணிப்பதன் மூலம் வரி வசூலைப் பெற்றனர். வரி செலுத்துவோர்க்கும், அரசிற்கும் இடையில் பணியாற்றுபவர் களாக நாடு அமைப்பைச் சேர்ந்த நாட்டார்கள் இருந்தனர். அரசர், அரசுகள் மாறிய போதும் இப்பணியை அவர்கள் தொடர்ந்து செய்தனர். நிலையான விளைச்சலையும், விவசாயக் குடிகளையும் ஏற்படுத்துவதற்காக தேவதானம், பிரம்மதேயம், பள்ளிச்சந்தம் என்ற வகையில் சலுகை பெற்ற நிலமுடைய ஊர்கள் முறையே கோயில்களுக்காகவும், அந்தணர்களுக்காகவும், சமண-பௌத்த கோயில்களுக்காகவும் வரிவிலக்குடைய கொடை களாக ஏற்படுத்தப்பட்டன. பிறபகுதிகளைவிடப் புதுக்கோட்டைப்

பகுதியில் இம்முறை நிலைகொள்ளக் கால அவகாசமும், தொடர்ந்து முயற்சிகளும் தேவைப்பட்டன. பிரம்மதேய நிலங்கள் வேதமறிந்த அந்தணர்களுக்கு வழங்கப்பட்டமையால் அந்நிலங்கள் அந்தணர்களுக்குள்ளேயே விற்பனை அல்லது வேறு வகையாக உரிமை மாற்றம் அடைவது விரும்பப்பட்டது. வெளியாட்கள் அவற்றைப் பெறுவது ஊக்குவிக்கப்படவில்லை. இதுபோலவே தேவதான, பள்ளிச்சந்த நிலக்கொடைகளும் இந்து, சமணக் கோயில்களிடமே இருப்பது விரும்பப்பட்டது. அந்தணர்களுக்கு கொடைகள், வரிச் சலுகைகள் வழங்கப்பட்டது இலவசமாக இல்லை. அவர்கள் கோயில்களில் பணியாற்றுவது போன்ற கடமைகளைச் செய்வதற்காகவே இருந்தன. அதற்கு ஊதியம் கிடையாது.

வரிவிலக்களிப்பதில் மற்றொரு முறையும் இருந்தது. அது "கற்பூரவிலை" என்ற பெயரில் அமைந்ததாகும். நிலங்களின் மீதான அரசிற்கு அல்லது சிற்றரசிற்குச் செல்லவேண்டிய வரிகள் முற்றிலும் "கற்பூரவிலை" என்ற பெயரில் விடுவிக்கப்பட்டன. முன்னரசுகள் முழுதும் வரிவிலக்கு செய்யாதிருந்தபோதிலும் இம்முறையால் முழுதும் விலக்குப்பெற்றன. கற்பூரவிலை என்ற பெயரில் ஒட்டுமொத்தமாக ஒரு தொகை செலுத்துவதன் மூலம் அரசனுக்குச் செலுத்த வேண்டிய நிலத் தீர்வைகள் கோயிலுக்குத் திருப்பி விடப்பட்டன. இதனைப் பல கல்வெட்டுகள் காட்டுகின்றன.

## 1. நிலம் தொடர்பான வரிகள்

நத்த வரி, தோட்டப்புற ஆயம், புஞ்சைக்கடமை, புஞ்சை வாரம், தோட்டப்புற ஆயம், மனைவரி போன்ற வரிகள் நிலம் தொடர்பான பெயர்களுடன் காணப்படுகின்றன. கடமை, கார்த்திகைப் பச்சை ஆகியவையும் நிலம் மற்றும் விளைச்சல் தொடர்பானவை ஆகும். நத்தம் என்பது விளைநிலங்களின் அருகில் அமைந்த உழவர் குடியிருப்பாகும். புஞ்சைக்கென்றும் நஞ்சைக்கென்றும், தோட்டத்திற்கு என்றும் வீட்டு மனைக்கு என்றும் தனித்தனி வகையில் வரிகள் வசூலிக்கப்பட்டமை இப்பெயர்களால் தெளிவாகிறது. கடமை என்பது ஒரு பகுதி தானியமாகவும் ஒரு பகுதி காசாகவும் நிலங்களின் மீது வசூலிக்கப்படும் பிரதானமான வரியாகும். கார்த்திகைப் பச்சை என்பது கார்த்திகை மாத

அறுவடையின்போது அல்லது விழாவின்போது அன்பளிப்பாகத் தரப்படும் வரியாகும். ஏர்வரி, ஏர், ஏர்க்கடமை என்ற வரிகள் உழவு உழுதல், பண்படுத்துதல் தொடர்பானவையாகும். ஓர் ஏர் ஒரு நாளில் உழும் பரப்பளவிற்குப் புஞ்சை நிலங்களின் மீது விதிக்கப்படுவதுமாகும்.

## நிலவரியின் அளவும் வசூலிப்பும்

நிலங்கள் எப்படி வரி விதிக்கப்பட்டன என்பதற்கு நார்த்தா மலையில் உள்ள இரண்டாம் இராஜேந்திரசோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1057) கல்வெட்டு ஓர் எடுத்துக்காட்டாகும். முதலில் நிலங்கள் அனைத்தும் அளக்கப்பட்டன. அதற்கு முன் அளக்கப்பட்டுப் பதிவேடுகளில் கண்டுள்ளதைவிடக் கூடுதலாக உள்ள நிலங்கள் கணக்கில் சேர்க்கப்பட்டன. இதுபோது புதிதாகத் திருத்தி விளைச்சலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. நார்த்தாமலையில் இவ்விதம் நிலம் புதிதாக அளக்கப்பட்டபோது அரசு அதிகாரிகள், துணை அலுவலர்கள் மற்றும் நார்த்தாமலை நகர அமைப்பு ஆதலால் அதன் பிரதிநிதியாகக் கண்காணியும் உடன் இருந்து அளந்துள்ளனர்.[3]

நிலங்களின் பாசன வசதி மற்றும் விளைச்சல் தன்மையும் வரிவிதிப்பில், வரியின் அளவை நிர்ணயிப்பதாக அமைந்தன. இதனை ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டால் அறிகின்றோம். கோடனேரி, கவிக்குறிச்சி, இலுப்பைக்குடி நாச்சி வயல் ஆகிய மூன்று நிலங்கள் நாட்டார், ஊரார், கோயிலைச் சேர்ந்தோரால் ஏல முறையில் விற்கப்பட்டன. இதனை ஒரு கைக்கோளன் விலைக்குப் பெற்றான். நிலங்கள் நெடுநாளாகப் பயிரிடப்படாமல் காடு மண்டியிருந்ததால் நிலங்களைப் பண் படுத்தி விளைச்சல் காண மூன்று ஆண்டுகள் வரிவிலக்குத் தரப் பட்டது. கோடனேரிப் பாசனத்திலிருந்த நிலங்களுக்கு ஒரு மா பரப்புக்கு 8 கலம் 1 தூணி 1 பதக்கு வரி விதிக்கப்பட்டது. ஆனால் இலுப்பைக்குடி நாச்சிவயலில் ஒரு கிணறும் இருந்ததால் 1 மா பரப்பிற்கு 10 கலம் விதிக்கப்பட்டுள்ளது. இதுபோல மருங்கூரிலிருந்த நிலம் பல நாள் தரிசாக இருந்து பிறகு விளைச்சலுக்கு வந்ததால் முதலாண்டில் ஒரு மா பரப்பிற்கு

கால்வாசி வரியாக 2 கலம் விதிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் ஆண்டு முதல் அரைவாசியான 4 கலம் விதிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் நிலங்களின் தரம் வரிவிதிப்பில் இடம் பெற்றிருந்தமை தெளிவாகிறது.[4]

நிலவரிக்கான தொகையை நிலமதிப்பின் விகிதமாகக் கணக்கிட்டால், அத்தொகை நிலத்தின் விலை மதிப்பில் மூன்றில் ஒரு பங்காக இருந்துள்ளது. இத்தொகையின் விகிதம் நிலமதிப்பின் 12.5 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை இருந்துள்ளது. இதில் பிற சில்லரை வரிகளும், சமூக வரிகளும் கணக்கில் சேரவில்லை.[5]

நாடு அமைப்புகளைச் சார்ந்த நாட்டார், நாட்டுக் கணக்கு என்ற கணக்கர் மூலம் வருவாய் நிர்வாகத்தை மேற்கொண்டனர். அரசிற்குத் தானியமாகவும், பணமாகவும் ஒட்டுமொத்தமாக ஒரு தொகையைச் செலுத்த வேண்டும். இதற்கான வரி விதிப்பு, வரி வசூல் மற்றும் வரிச் செலுத்துதல் தொடர்பான வரிப்பொத்தகங்களை அவர்கள் நிர்வகித்தனர். வீரபாண்டியன் காலத்தில் சேமப் பிள்ளையாரின் கீழிருந்த புவனசிங்கதேவன் என்ற அரசதிகாரி, கோயிலில் ஒரு பகுதியைப் புதிதாகச் சேர்த்து, அத்தெய்வத்திற்கு நகைகள் கொடை கொடுத்தும், பூசைக் கட்டளைகள் ஏற்படுத்தியும், விளைச்சலின் ஒரு பங்கினைக் கோயிலுக்கு நல்கியும், கோயில் ஊழியர்களுக்கு நல்கியும் உள்ளான் என்பதைப் பார்க்கும்போது நாடுகளில் வரி நிர்வாகப் பணியில் அரசு அதிகாரிகளின் மேலாண்மையும், செல்வாக்கும் இருந்ததைக் காண்கின்றோம்.[6]

### வரிச்சுமை

பண்டைய நாட்களில் வருமான வரி விதிப்பு இல்லை. அதனால் வரிச்சுமையைப் பெரும்பாலும் நிலவருவாயே சுமந்தது. எனவே போர்க் காலங்களிலும், அரசு மாற்றங்களின்போதும் அதிகப்படியான வரி விதிக்கப்பட்டது. வரிகள் செலுத்தப்படாத நிலையில் வரி நிலுவைகள் பலவந்தமாகவும் வசூலிக்கப்பட்டன

கி.பி. 1499-ல் விஜயநகர அரசின் கீழிருந்த நரசநாயக்கர் அதிகப்படியான வரி கட்டாயப்படுத்தி வசூலித்ததைத் திருவரங்குளத்தில் உள்ள ஒரு கல்வெட்டின்மூலம் அறிகின்றோம். ''விலையே இறையாக'' அதாவது நிலத்தின் விலைமதிப்பே

வரியாக அவர் விதித்தபோது நாட்டார் கடன் பெற்று வரியைச் செலுத்தினர். கடன் தொகையைத் திருப்பித் தர இயலாத நிலை ஏற்பட்டபோது பாலைக்குடி, களங்குடி, கிழிநல்லூர் ஆகிய மூன்று ஊர்களையும் கோயிலுக்கு விற்றுக் கடன் தொகையை அடைத்தனர். வரிச்சுமை காரணமாக நிலங்களைப் பயிர் செய்யக் குடிகள் இல்லாமல் (குடிமுட்டி) போயினர். எனவே கோயிலே புதிதாக குடிகளை வைத்து உழ அனுமதிக்கப்பட்டது. உழு குடிகளை மாற்றுவது என்பது இடைக்காலத்தில் இயலாத ஒன்றாகும். எனினும் வரிச்சுமையால் அது இங்கு நிகழ்ந்துள்ளது.[7] கி.பி. 1520, 1523 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த மேலும் இரு கல்வெட்டுகள் கோயிலுக்கு நாட்டார் இம்மூன்று ஊர்கள் தொடர்பாகத் தந்த கூடுதல் சலுகைகளைக் காட்டுகின்றன. இவ்வூர் நிலங்கள் கோயிலின் ''பண்ணை'' நிலங்களாக இருக்க அனுமதிக்கப்பட்டன. இதன்மூலம் முழுவிளைச்சலும் வரி இல்லாது கோயிலுக்குச் சேர்ந்து வழிபாடுகளும், திருப்பணிகளும், தேர்த் திருவிழாவும் இன்னும் பிற அறச்செயல்களும நாட்டாரின் தர்மங்களாகக் கோயிலைச் சேர்ந்தன. இதன் வழியாக மூன்று ஊர்களும் ''சர்வ மான்ய'' மாகின.[8]

விஜயநகரர் அரசு அதிகாரிகள் ஊராட்சி அமைப்புகளைப் பலவந்தப்படுத்தி வரி வசூலித்ததையும், நாட்டார் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத் தீர்மானம் (ஒப்பு முறி) செய்ததையும் நார்த்தாமலைக் கல்வெட்டொன்றால் அறிகின்றோம். இதன்படி நார்த்தாமலைச் சீர்மை ஒரு புரவாக (தொகுதியாக) அளக்கப்பட்டு நல்ல நிலங்கள், விளையா நிலங்கள் என்று தரம் பிரிக்கப்பட்டு ''தர்மப்படி'' பாபம் ஏதும் இல்லாமல் வரி விதித்து வரி கொடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை மீறி அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து கொள்பவர்கள் (ராஜகரத்துக்கு உள்குடுத்த)[9] நாட்டுத்துரோகிகள் ஆவர். அவர்களைக் கீழ்படக்குத்தி அவர்களது நிலங்களும், வீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டுக் கோயிலுக்குச் சொந்தமாக்கப் படும் என்றும் எச்சரிக்கப்பட்டனர்.

இச்செய்திகள் வரிவிதிப்பு, வரிச்சுமை, மற்றும் வரிவசூலிப்பில் நாட்டாரின் பங்கு மற்றும் பொறுப்பு ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## 2. நீர்நிலை தொடர்பான வரிகள்

ஏரிவரி, ஏரிக்கடமை, ஆற்றங்கரைத்தேவை, ஒழுக்குநீர்ப் பாட்டம், நீர் நாழிகை நீராணி ஆகிய பெயர்கள் நீர் தொடர்பாகக் காணப்படுகின்றன. ஏரிகள் பராமரிப்பு ஆற்றங்கரைப் பராமரிப்பு ஆகியவை உழவிற்கு இன்றியமையாதவை. அவற்றிற் கென்று தனிவரிகள் வசூலிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டுள்ளது. மடை, மதகுகளைப் பராமரித்து நீர்ப்பாசனத்தை நெறிப்படுத்து பவர்களது ஊதியத்திற்காக வசூலிக்கப்படுவது நீராணியாகும். குறிப்பிட்ட கால அளவு நீர் திறந்து விடுவது நீர் நாழிகையாகும். ஏரி, குளங்களில உள்ள மீன்களைப் பிடிப்பது மற்றும் பாசியை உரமாகப் பயன்படுத்துவது போன்றவற்றிற்காக வலையர் மற்றும் நில உரிமையாளர்களிடம் பெறப்பட்டது ஏரி மீன்பாட்டம், பாசிப்பாட்டம் ஆகியவையாகும். இவ்வருவாய்களும் பராமரிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.[10]

குடிமராமத்து எனப்படும் இவை தற்பொழுது கைவிடப்பட்டு விட்டன. எனினும் மீண்டும் உலக வங்கித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவுள்ளன.

## 3. தொழில் தொடர்பான வரிகள்

செக்கிறை. தறிஇறை, தறிக்கடமை, தட்டார்படி, தட்டார் பாட்டம், தலைக்காசு, தச்சுதாழ்வு, தோலொட்டுபட்டடை, ஈழப்புஞ்சை, இடையர்வரி, பறை, பறைஉறை, தட்டொலி என்று பல வரிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. எண்ணெய் ஆட்டுதல், துணி நெய்தல், உலோகப் பொருள்கள் உற்பத்தி, மரப்பொருள்கள் உற்பத்தி ஆகியவற்றிற்கான வரிகள் விதிக்கப் பட்டுள்ளன. மேலும் மரம் ஏறித் தேங்காய் பறித்தல், கள் இறக்குதல் (ஈழம் புஞ்சை) ஆடுமாடு மேய்த்தல், பால்-தயிர்-மாமிச உற்பத்தி (இடையர் வரி) வாத்தியங்கள் வாசித்தல் (தட்டொலி, பறை) ஆகிய தொழில் புரிவோரின் மீதும் வரி விதிப்புகள் இருந்துள்ளன.[11] இவை அன்றைய சமுதாயத்தின் பொருளாதார அமைப்பை உணர்த்துபவையாகும். இன்று இவ் வகை வரிகள் சேவை வரி (Service Tex) தொழில் வரி (Professional Tax) என்ற அமைப்பில் இருப்பதைக் காணலாம்.

## 4. வணிகப் பொருட்கள் தொடர்பானவை

நெல்வரி, அரிசிக்காசு, பஞ்சுபீலி, ஆடைக்காசு, உப்பு வண்டி, பருப்பு வண்டி வெற்றிலைத்தரகு, மாட்டு வரி முதலிய வருவாய்ச் சொற்கள் பொருள்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளாகத் தெரிகின்றன. நெல், அதிலிருந்து பெறப்படும் அரிசி, பஞ்சு அதிலிருந்து பெறப்படும் ஆடை என மூலப்பொருள்களும் உற்பத்திப் பொருள்களும் வரிவிதிப்புப் பெற்றுள்ளன. உப்பு வண்டி, பருப்பு வண்டி, மாட்டு வரி ஆகிய வரிகள், பொருள்கள் மட்டுமல்லாது போக்குவரத்திற்கும் வரி விதிக்கப்பட்டதைக் காட்டுகின்றன. வண்டி என்பது போக்குவரத்து அல்லாமல் ஓர் அளவு என்ற அடிப்படையிலும் இருக்கலாம். வெற்றிலையும், அதனை விற்பதில் ஏற்படும் தரகிற்கும் வரிவிதிப்பு இருந்துள்ளது.[12] இதுபோல ஏனைய பொருட்களின் தரகிற்கும் வரிவிதிப்பு இருந்திருக்கலாம். இன்று இவை ஆயத்தீர்வை (Excise duty) விற்பனை வரி, (Sales Tax) நுழைவு வரி, சுங்கவரி (Octroi) ஆகியவற்றை நினைவூட்டுகின்றன. உப்பு வண்டி இன்றைய வாகன வரியை (Vehicle Tax) நினைவூட்டுகிறது.

## 5. அரசு நிர்வாகம் தொடர்பானவை

திருவாசல் விநியோகம், தூதுவரி, வாசல்பேறு, வாசல்வரி, காரியவாராட்சி போன்றவை நேரடியாக அரசன் அரசு, அரண்மனை தொடர்பான வரிகள் எனலாம். திருவாசல் என்பது அரண்மனை வாசலைக் குறிப்பதாகும்.[13]

## 6. படை வரிகள்

சந்துவிக்கிரகப்பேறு, ஆனைத்தேவை, ஆனைக்கூடம், ஆனைச்சாலை, குதிரைப்பந்தித்தேவை, குதிரைப்பணம், பாடிகாவல் ஆகியவை போர் மற்றும் பாதுகாப்புத் தொடர்பானவை. சந்துவிக்கிரகப்பேறு என்பது போர் மற்றும் அதனால் ஏற்படுத்தப்படும் அமைதிக்காக விதிக்கப்படுவதாகும். பாடிகாவல் என்பது எதிரிகளிடமிருந்து குறிப்பிட்ட ஊர் அல்லது பகுதிகளைப் பாதுகாப்பதற்காக வலிமை மிக்கவர்கள் (ஏறத்தாழ சிற்றரசர்கள்) வசூலிப்பதாகும்.[14]

## 7. சமூக வரிகள்

சபா விநியோகம், நாட்டு விநியோகம், நகர விநியோகம், நாடேன்றவரி, நாடுபடுதேவை ஆகியவை பிராமணர் சபை, உழவர் அமைப்பு, வணிகர் அமைப்புகள் தங்கள் தங்கள் நிர்வாக அமைப்புகள் தொடர்பாக வரிகள் வசூலிப்பதாகும், அரசிற்குச் செல்ல வேண்டிய வரிகளும் இவர்கள் மூலமாகவே வசூலிக்கப் பட்டுச் சென்றன.[15]

## 8. ஆவணம் தொடர்பானவை

இலாஞ்சினைப்பேறு, ஓலை எழுத்துப்பேறு, ஓலை விநியோகம், ஆண்டெழுத்துத் தேவை, கணக்கப்பேறு, வேண்டிக்கோள் ஆகியவை அரசாவணம், ஆணை, விண்ணப்பம் தொடர்பானவை யாகும். ஓலை என்பது பொதுவாக அரசாணையைக் குறிப்ப தாகும், இலாஞ்சினை அரசு ஒப்புதல் முத்திரை தொடர்பானது[16]. வேண்டிக்கோள் விண்ணப்பம் தொடர்பானது. ஊர், சபை, கோயில், வணிக நகரம் ஆகியவற்றிற்கென்று தனித்தனிக் கணக்கர்கள் இருந்தனர். அவர்கள் பொதுவாகப் பெறப்பட்ட வருவாயிலிருந்தே ஊதியம் பெற்றனர். இன்று ஆவணங்கள் பதிவிற்காக முத்திரைத் தாள் சட்டம் தனியாக உள்ளதையும், முத்திரைத்தாள் கட்டணம் (Stamp duty) உள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

கல்வெட்டுகளில் பல ஆவணங்களும் ஆவணங்களில் கையொப்ப மிட்டோர் சாட்சிகள் ஆகியோரின் பெயர்களும் பல இடங்களில் காணப்படுகின்றன. சிவபிராமணர்களின் பெயர்கள் சமஸ் கிருதத்தில் அல்லாது தமிழில் உள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும். எடுத்துக்காட்டாக எதிரிலி சோழபட்டன், சைவாசிரியன் திருவேகம்பமுடையான் திருச்சிற்றம்பலப்பட்டன் ஆகியவற்றைச் சொல்லலாம்.[17] இப்பெயர்கள் அன்றைய அரசர்களின் பெயர் களைப் பின்பற்றியுள்ளன, அன்றைய சமுதாயத்தில் நிர்வாக ஆற்றல், அறிவாற்றல் மிகுந்த எல்லோரும் எழுத்தறிவுடையோர் என்று சொல்ல இயலாது. ஏனெனில் அரச மக்கள், மறமுதலிகள், சிவபிராமணர், கோயில் வாசல் பிச்சமுதலியார் (ஒரு சைவப்பிரிவுத் தலைவர்) முதலியோர் தங்கள் கையொப்பங்களை இடத்தெரியாத வர்களாக இருந்துள்ளனர். அவர்களுக்கு ஊர்க்கணக்கு, கோயில்

கணக்கு போன்றோர் மேலொப்பம் (தற்குறிமாட்டறிதல்) இட்டுள்ளனர்.[18] எழுதுபொருள்கள் குறைவாக இருந்தமையால் நினைவாற்றல் மூலமாகவே அவர்களது, செயலாற்றல் இருந்திருக்கக் கூடும்.

## 9. நீதி தொடர்பானவை

நீதிமன்றம், நீதிபதி என்று தனிப்பட்ட அமைப்புகள் அன்றில்லை. சபை, ஊர், நகரம் ஆகிய அமைப்புகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர் நெறிமுறைகளைக் கண்காணித்தனர். இவர்கள் விதித்தவை தண்டமாகப் பெறப்பட்டன. தெண்டப்பணம் அவ்வகையில் ஒரு வருவாயாகும்.[19]

## 10. இலவச மற்றும் கட்டாயச் சேவைகள்

எச்சோறு, கூற்றரிசி, ஆள்வரி, ஆள்தேவை, முட்டாஆள், வெட்டி, வெட்டிப்பாட்டம், வெட்டித்தேவை என்ற வருவாய்ச் சொற்கள் இலவச சேவை தொடர்பானவை. ஊர்ப் பொதுவான பணிகள் வீட்டிற்கு ஓர் ஆள் அனுப்பப்பட்டுக் கட்டாயமாகச் செய்யப்பட்டன. அரசு அதிகாரிகள் பணி தொடர்பாகப் பல்வேறு இடங்களுக்குச் செல்லும்போது அவர்களது செலவுகளும் ஆங்காங்கே ஈடு செய்யப்பட்டன.[20]

### முடிவுரை

தனியொரு அமைப்பாக விளங்கிய நாட்டார் உள்ளாட்சி அமைப்பு, 16-ஆம் நூற்றாண்டில் பாளையக்காரர் முறை, செல்ற சில நூற்றாண்டுகளில் ஜமீன்தாரி முறை ஆகியவை புகுத்தப் பட்டதால் மறைந்து போயிற்று. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஆங்கிலேய அரசால் மையப்படுத்தப்பட்ட அரசு அலுவலர் தொகுதி மற்றும் நிர்வாகம் கொண்டு வரப்பட்டு அதன் பிறகு சமத்துவ அரசு அமைப்பால் ஊரளவில் இருந்த எல்லாப் பணிகளும், பொறுப்புகளும், அதிகாரங்களும் மையப்படுத்தப்பட்ட அரசிற்குச் சென்றுவிட்டன. ஏழைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும். கோயில், சமய நிறுவனங்கள் மற்றும் அறச்செல்வர்களிடமிருந்து அரசிற்குக் கைமாறிப் பெரும் செலவு தருவதாகவும் அமைந்து

விட்டது. வரிச்சுமையில் இருந்து அந்தக் காலத்தில் யாருக்கும் விலக்களிக்கவில்லை. ஆனால் இன்று அரசியல் மற்றும் சமத்துவக் காரணங்களுக்காக பல வரி விலக்குகள் உள்ளன.

பொதுவாக நோக்கும் போது 200க்கும் மேற்பட்ட வரிகளா மக்கள் செலுத்தினார்கள்? என்று வியப்புத் தோன்றும். இவ்வருவாய்ச் சொற்கள் கி.பி. 1190 முதல் 1400 வரையிலானவை.

கி.பி. 1193 - 1250ல் சுமார் 50ம்

கி.பி. 1251 - 1300ல் சுமார் 90ம்

கி.பி. 1301 - 1350ல் சுமார் 25ம்

கி.பி. 1351 - 1400ல் சுமார் 20ம் என இவ்வரிகள் பரவலாக 200 என்ற எண்ணிக்கையில் இருந்தனவாகும்.

இவ்வருவாய்ச் சொற்கள் தற்கால வருவாய்ச் சொற்களிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றன. இன்று நாடு ஒட்டு மொத்தமாக நிர்வகிக்கப்படுவதாலும் நாட்டின் பாதுகாப்பு என்பது ஒட்டுமொத்தமாக இருப்பதாலும், செலவினங்கள் கூடுதலாக இருப்பதாலும் வரி விதிக்கும் போக்கு முற்றிலும் மாறுபட்டு விட்டது எனலாம்.

அன்று எவற்றின் மீதெல்லாம் அதிக வரி பெறப்பட்டதோ அவையெல்லாம் இன்று பெரும்பாலும் வரி இல்லாதும், வரி விலக்குடனும் உள்ளன. அன்று நாடு முழுதும் மையப்படுத்திய நிர்வாக அமைப்பு இல்லை. உச்சநிலையில் பெரும் பொறுப்புடைய அரசு அலுவலர் தொகுதியும் இல்லை. எனவே அலுவலக நிர்வாகச் செலவுகள் குறைவாக இருந்தன. செல்வம் மிக்க பெரிய நில உடமையாளர்களும் இல்லை. உள்ளாட்சி அமைப்பாக விளங்கிய நாட்டார்களே மக்களுடைய பங்களிப்போடு அரசின் பெரும்பாலான பணிகளை மேற்கொண்டனர். இன்றைய குடியரசுத் தலைவர் தலைமையிலான அரசு அமைப்போடு ஒப்பிடும்போது அன்றைய நிர்வாகச் செலவுகள் மிகக் குறைவாகும்.

பண்டைய வருவாய்களில் நிலவருவாய் போன்றவை அரசியல் செல்வாக்கால் விடப்பட்டு வருமான வரி, ஆயத்தீர்வை (Excise duty) சுங்கவரி போன்றவை அன்றைய அரசின் பிரதானமான நிலவரியின் இடத்தை நிரப்பியுள்ளன.

அன்று எளிமையான, சமயம் சார்ந்த வாழ்வு வாழ்ந்தும், பிறருடைய உடமைகளைக் கள்ளத்தனமாக அபகரிக்காதும் விளங்கிய செல்வந்தர்கள், ஏழைகள் கஷ்டப்படாமல் இருக்க உதவுவதைத் தர்மமாகவும், கடமையாகவும் கொண்டிருந்தனர். இத்தகைய செயல்பாடு சமத்துவக் கொள்கை சார்ந்த அரசு நிர்வாக அமைப்பால் விடுபட்டுப் போனது.

இதுவே புதுக்கோட்டை நிலம், வருவாய், நிர்வாகம் பற்றிய ஆய்வில் அறியக் கிடைக்கும் உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. Tirumalai. *R. Studies in Ancient Township of Pudukkotai*, 1981, Institute of Epigraphy, State Department of Archaeology, Government of Tamilnadu.
2. Noboru Karashima : *History and Society in South India* 2001, Oxford University Press, New Delhi
3. திருமலை ஆர். மேலது பக். 6 புதுக்கோட்டை கல்வெட்டு, எண். 112
4. மேலது பக். 6, புதுக்கோட்டை கல்வெட்டு எண் : 486
5. மேலது பக். 183
6. மேலது பக். 59-60
7. மேலது பக். 53-54
8. மேலது
9. மேலது பக். 318
10. பார்க்க : நொபுரு கராஷிமா; மேலது, பட்டியல் 16 மற்றும் பக். 105 - 128, திருமலை ஆர்., மேலது, சிறப்புச் சொற் பட்டியல் (Glossary) பக். 357-381
11. முதல் 16 வரை மேலது
17. திருமலை ஆர். மேலது பக். 81, 86
18. மேலது பக், 38

19, 20. பார்க்க அடிக்குறிப்பு எண் : 10

காசு

பிரிட்டிசு அரசர் நான்காம் சார்சு கி.பி. 1830-இல் வெளியிட்ட செப்புக்காசு ஒன்று கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் தக்கலையைச் சேர்ந்த திரு.செல்வின் என்பவரிடமிருந்து கிடைத்துள்ளது.

காசின் முன்பக்கம் நான்காம் சார்சு மன்னனின் உருவமும், உருவத்தைச் சுற்றி "DEI GRATIA" என இலத்தீன் மொழி வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன.

பின்பக்கத்தில் கையில் மலர் ஏந்திய பெண் ஒருத்தியின் அமர்ந்த உருவமும், அவ்வுருவைச் சுற்றி 'BRITANNIAR REX FID DEF" என்ற இலத்தீன் மொழி வாசகமும் எழுதப்பட்டுள்ளன. பெண்ணின் கையில் உள்ள மலர் முத்தலைவேல் வடிவில் காணப்படுகிறது. கொண்டையின் மீது ஒரு கிளி அமர்ந்துள்ள காட்சி காணப்படுகிறது.

"DEI GRATIA" என்ற இலத்தீன் வாசகத்திற்கு "By the Grace of God" என்றும், BRITANNIAR REX FID DEF என்பதற்கு King of Federation of Great Britain" என்றும் பொருள்.

செய்தி : திரு. தே. கோபாலன்
தொல்லியல் அலுவலர்
கன்னியாகுமரி

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு தொல்லியல் (ம) அருங்காட்சியகத்துறை ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப, அவர்கள் சார்பாக திரு. க. குழந்தைவேலன் கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.